**மஹர பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மஹர பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் செயற்திட்டத்திற்கு மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 86,769 தொகை நிதிக்கூற்றுக்களில் கடன்கொடுத்தோராக ஒதுக்கப்பட்டிருந்தது.

(ஆ) 03 உட்கட்டமைப்பு வசதிகள் செயற்திட்டத்தின் 10 சதவீத நிறுத்திவைத்தல் பணமான ரூபா 91,247 தொகை கணக்குகளில் பொறுப்பாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நில வரைபட இலக்கம் 13085 A என்ற வரைபடத்திற்குரிய காணி மற்றும் கட்டிடத்தின் பெறுமதியான ரூபா 1,715,000 தொகை கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2017 ஆம் ஆண்டில் சபை நிதியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 06 நிர்மாணங்களின் பெறுமதியான ரூபா 3,329,166 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சபைக்கு உரித்துறுதி மூலம் வழங்கப்பட்ட பொது வசதிகளுக்கான 4 காணிகளின் பெறுமதியான ரூபா 43,164,400 தொகை கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட உடுபில மூகலான எலவத்த காணியின் பெறுமதியான ரூபா 2,240,000 தொகை கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 15 காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியான ரூபா 17,749,248 தொகை மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) அறவிட வேண்டிய ரூபா 19,890 தொகையான நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் கணக்குகளில் உள்ளடக்கப்படவில்லை.

(ஐ) மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் பொதுக் களஞ்சிய இருப்பு ரூபா 3,529,624 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் இருப்புக் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியான ரூபா 6,334,200 பெறுமதி உள்ளடக்கப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

---

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள 03 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றிற்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 38,082,073 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

---

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர் மீதியான ரூபா 213,059,830 தொகைக்காக காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட களஞ்சிய கடன்கொடுத்தோர் மீதியான ரூபா 9,968,592 தொகையில் 02 வருடத்திற்கும் 03 வருடத்திற்கும் இடையிலான மீதி ரூபா 2,216,964 தொகை மற்றும் 03 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 1,031,756 ஆகும்.

**1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

---

**தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை**

---

உரித்தை எழுத்துமூல சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தாத காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 3,378,870 ஆகும்.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

---

கீழே காண்பிக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 203 | சபையின் ஆதனங்கள் தொடர்பாக முழுமையான மெய்மையாய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டு 06 மாதங்களைக் கடந்த ரூபா 74,048 பெறுமதியான 44 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | 02 வருடங்களை விஞ்சிய 4,962,189 தொகையான பொது வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 36,269,237 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 54,838,586 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 10,163,000 | 12,980,012 | 9,451,933 | 3,961,900 | 8,900,000 | 10,175,668 | 10,175,668 | 5,943,761 |
| வாடகை | 6,573,000 | 6,580,613 | 6,580,613 | (1,934,964) | 6,023,000 | 6,155,117 | 6,155,117 | (1,360,090) |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,461,100 | 1,733,522 | 1,733,522 | (236,664) | 2,637,000 | 1,976,639 | 1,976,639 | 32,426 |
| ஏனைய வருமானம் | 260,677,000 | 220,430,096 | 220,430,096 | 560,985 | 245,793,000 | 213,047,008 | 213,047,008 | - |
| | 279,874,100 | 241,724,243 | 238,196,165 | 2,351,256 | 263,353,000 | 231,354,432 | 231,354,432 | 4,616,097 |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்குகளின் பிரகாரம் ரூபா 3,934,760 தொகையான நிலுவை ஆதனவரி மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் பிரகாரம் ரூபா 9,471,840 நிலுவை மீதியொன்றைக் காண்பித்தது. இந்த வேறுபாட்டிற்கான காரண விடயங்கள் சபையினால் விளக்கப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 ஏனைய வருமானம்**

**விளம்பர அறிவித்தல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 28 ஆந் திகதிய 1947/6 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பிரகாரம் விளம்பர அறிவித்தல் தொடர்பான உப விதியின் பிரகாரம் 66 விளம்பர அறிவித்தல் பதாதைகளுக்கான கட்டணங்கள் ரூபா 114,633 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 28 ஆந் திகதிய 1947/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் உள்ளடக்கப்பட்ட உபவிதியின் பிரகாரம் விண்ணப்ப பத்திரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும், ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 3,976,150 ஆகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உபவிதி**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதியொன்று விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சபையினால் 18 விடயங்களுக்காக மாத்திரம் உபவிதி விதிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

விதிக்கப்பட்ட உபவிதியின் பிரகாரம் காண்பிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்ற வேண்டியிருந்த 08 இலக்குகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் பெறப்படாமை**

செய்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 19,300,000 தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் ரூபா 13,334,938 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்தத பூர்த்தி மட்டம் அடையப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) எதிர்பார்த்த நலன்கள் கிடைக்கப்பெறாமை**

முன்னைய ஆண்டின் போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட 04 சனசமூக நிலையங்களில் இருந்து 2018 யூன் 29 ஆந் திகதி வரையிலும் எதிர்பார்த்த விளைவுகள் பெறப்பட்டிருக்கவில்லை.

**(உ) நிறைவேற்றாத இலக்குகள்**

2017 இன் பாதீட்டின் மூலம் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக கூட்டுப்பசளைத் தளமொன்றை நிர்மாணிப்பதற்கு பொருத்தமான இடமொன்றைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா ஒரு மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது மேற்கூறப்பட்ட பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் என்பன 2018 யூன் 29 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

(அ) பிரதேச சபைக்குக் கிடைக்கின்ற முறைப்பாடுகள் தொடர்பாக பிரதான அலுவலகத்தின் பொதுமக்கள் முறைப்பாட்டுப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. 03 உப அலுவலகங்கள் மூலம் பேணப்பட்டுச் செல்லப்படுகின்ற பொதுமக்கள் முறைப்பாட்டுப் பதிவேட்டின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டில் கிடைத்த 1,035 பொதுமக்கள் முறைப்பாடுகளில் 451 முறைப்பாடுகளுக்கு 2018 யூலை 06 ஆந் திகதி வரையிலும் தீர்வு காணப்படவில்லை.

**(ஆ) நெக்பா கணனி முறைமையை அமுல்படுத்தல்**

பிரதேச சபையினால் அலுவலக நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்வதற்காக 2013 சனவரி 01 ஆந் திகதி நெக்பா அவுஸ்ட்ரேலியா தனியார் நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்டு ஆதனவரி, நானாவித வருமானம், கணக்கு நடவடிக்கைகள், இருப்புக் கட்டுப்பாடு, வீதி விளக்குகள் மற்றும் சம்பளம் போன்ற துறைகளில் முகாமைத்துவ மென்பொருள் முறைமையைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,796,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த மென்பொருள் முறைமைளைக் கொள்வனவு செய்வதன் அடிப்படை நோக்கமான 06 துறைகளின் தரவுகளைச் சேகரித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வதாக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும், ஆதனவரி வருமானம் மாத்திரமே முகாமை செய்யப்பட்டிருந்தது.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| தரம் | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடமான ஊழியர் எண்ணிக்கை | மிகை ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 04 | 04 | - | - |
| மூன்றாம் நிலை | 01 | 01 | - | - |
| இரண்டாம் நிலை | 52 | 48 | 04 | 02 |
| ஆரம்ப நிலை | 96 | 93 | 03 | - |
| மொத்தம் | 153 | 146 | 07 | 02 |

வருமானப் பரிசோதகர் பதவியொன்று 2015 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாகக் காணப்பட்டது.

### 3.4 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

#### (அ) சுற்றாடல் அனுமதிப்பத்திரம்

சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய 197 வியாபார நிலையங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 51 வியாபார நிலையங்களுக்கு மாத்திரமே சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

#### (ஆ) காணி விற்பனை வரி

சகல அதிகாரப் பிரதேசத்தில் கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட காணிகள் தொடர்பாக விற்பனை விலையின் அடிப்படையில் அறவிட வேண்டிய 1 சதவீத வரி வருமானத்தை அறவீடு செய்யும் போது வருமானப் பிரிவின் உத்தியோகத்தர்களின் மதிப்பீட்டு விலையினை அடிப்படையாகக் கொண்டு வரித் தொகை அறவிடப்பட்டிருந்தது. எனினும், இந்த காணிகளின் உள்ளபடியான விற்பனை விலையினை அடிப்படையாகக் கொண்டு வரிப்பணம் அறவிடப்படவில்லை.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாமை

களஞ்சியத்திற்காக பேணிச் செல்லப்படுகின்ற களஞ்சிய இருப்பு பதிவேடு முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. களஞ்சியத்திலிருந்து பிரதான அலுவலகத்திற்கு விநியோகிக்கப்பட்ட இருப்புக்கள் களஞ்சிய இருப்பு பதிவேட்டிலிருந்து அகற்றப்படாதிருந்ததுடன் இதன் காரணமாக 2018 யூலை 04 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது களஞ்சிய இருப்பின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 3.5.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

2015 ஆம் ஆண்டில் நன்கொடையாக சபைக்கு கிடைத்த ரூபா 33,877,530 பெறுமதியான 03 மோட்டார் வாகனங்கள் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.3 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நூலகப் புத்தக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 64,911 பெறுமதியான 413 புத்தகங்கள் தொலைந்து போயிருந்தன.

### 3.6 பெறுகைகள்

### 3.6.1 ஒப்பந்த நிர்வாகம்

(அ) ஊறுவல் பேருவ உப அலுவலகத்திற்குரிய 06 பொதுக் காணிகளுக்கு கம்பி வேலியிடுவதற்காக ரூபா 821,049 தொகை கொடுப்பனவு செய்யப்பட்ட இந்த வேலைக்கான கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கூறுவிலை கோரப்படாதிருந்ததுடன் 2016 திசெம்பர் 30 ஆந் திகதிய விலைக் குழுத் தீர்மானத்தில் கூறுவிலையை அடிப்படையாகக் கொண்டு ஒரு அடி நீளத்திற்கு ரூபா 578 வீதம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்த வேலியின் உயரம் அல்லது கம்பி சுற்றுக்களின் எண்ணிக்கை தொடர்பாக குறிப்பாகக் காண்பிக்கப்படவில்லை.

(ஆ) வீதிகளுக்கு கொங்கிறீட் இடும் 10 வேலைகளுக்குரிய ரூபா 3,739,511 தொகையைக் கொடுப்பனவு செய்யும் போது அந்த வேலைக்குரிய பொறியியல் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட கொங்கிறீட் படையின் தடிப்பு மற்றும் அமுக்கச் சக்தி தொடர்பான ஆய்வுகூட பரிசோதனையின் மூலம் உறுதிப்படுத்தப்படாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட 21 செலவினத் தலைப்புக்களுக்குரிய ரூபா 7,786,200 தொகை முழுமையாக சேமிக்கப்பட்டமை மற்றும் 34 செலவின விடயங்களுக்குரிய ரூபா 41,581,372 தொகையில் 20 சதவீதம் முதல் 99 சதவீதம் வரை சேமிக்கப்பட்டமையின் காரணமாக சபையின் நோக்கம் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக தயாரிக்கப்பட்ட பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கண்ககாய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) வருமான நிர்வாகம் | (i) ஆதனவரி மற்றும் கடை வாடகை மதிப்பீடு செய்யப்படாமை |
| | (ii) நிலுவை வருமானத்தைச் சேகரித்தல் நலிவான நிலையில் காணப்பட்டமை |
| | (iii) குறைவாகப் பயன்படுத்தப்பட்ட கடைகளை மீண்டும் கேள்வி கோரி வழங்காமை |

| | | | |
|---|---|---|---|
| | | (iv) | ஆதனவரி மீள்திருத்தம் செய்யப்படாமை. |
| (ஆ) | ஒப்பந்த நிர்வாகம் | | மேற்பார்வை நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டடை |
| (இ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | | நடைமுறை நிலைமைக்கு இணங்கும் வகையில் பாதீடு தயாரிக்கப்படாமை |
| (ஈ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) | பௌதீக ரீதியில் காணப்படாத சொத்துக்கள் கணக்குகளிலிருந்து அகற்றப்படாமை |
| | | (ii) | சொத்துக்களின் உரித்தை உறுதிப்படுத்துவதற்கான உரித்துறுதி அல்லது கையளித்தல் கட்டளை பெறப்படாமை |
| | | (iii) | நிலையான சொத்துக்களை கணக்கு வைக்கும் கொள்கையொன்று ஏற்படுத்தப்படாமை |
| | | (iv) | வருடாந்தம் சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்படாமை |
| (உ) | கழிவுப்பொருள் முகாமைத்துவம் | (i) | கழிவுப்பொருள் வரி அறவிடப்படாமை |
| | | (ii) | கழிவுப்பொருட்களை வகைப்படுத்தி வழங்குவதற்கு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்படாமை |
| | | (iii) | கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கான செலவினத்தைக் குறைக்காமை |